**எட்டாம் வகுப்பு** **தமிழ்**

**இயல் ஒன்று**

***I. சரியான விடையைத் தேர்ந்தெடு.***

*1. இசை என்பதன் பொருள் _____.*
*அ) புகழ் ஆ) மணம் இ) குறியீடு ஈ) அழைப்பு*

*2. பாரதியார் நடத்திய இதழ்களுள் ஒன்று ______.*
*அ) நவசக்தி ஆ) தமிழ்த்தென்றல் இ) இந்தியா ஈ) தென்றல்*

*3. பாரதியாரை 'மறம் பாட வந்த மறவன்' என்று பாராட்டியவர் _____.*
*அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) வாணிதாசன் ஈ) வண்ணதாசன்*

*4. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் _____.*
*அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்*
*இ) நம்பி அகப்பொருள் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை*

*5. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடு.*
*அ) நிலம், நீர், தீ, காற்று, வானம்*
*ஆ) காற்று, வானம், நிலம், நீர், தீ*
*இ) காற்று, வானம், நீர், தீ, நிலம்*
*ஈ) காற்று, தீ, நிலம், நீர், வானம்*

*6. தொல்காப்பியத்தில் ஒவ்வொரு அதிகாரமும் ______ இயல்களைக் கொண்டது.*
*அ) ஒன்பது ஆ) பத்து இ) எட்டு ஈ) ஏழு*

*7. பசு ______*
*அ) கதறும் ஆ) உறுமும் இ) கத்தும் ஈ) முழங்கும்*

*8. 'கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப் பல்பொதி' என எழுத்துகள் குறித்து கூறும் நூல் _____.*
*அ) புறநானூறு ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) வளையாபதி*

*9. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுத்தப்பட்ட எழுத்துகள் ______ என அழைக்கப்பட்டன.*
*அ) வட்டெழுத்துகள் ஆ) ஓவிய எழுத்துகள்*
*இ) கண்ணெழுத்துகள் ஈ) தமிழெழுத்துகள்*

*10. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க தற்போது பயன்படுவது _______.*
*அ) இணைக்கொம்பு ஆ) ஒற்றைக் கொம்பு*
*இ) இரட்டைக்கொம்பு ஈ) கொம்பு கால்*

*11. கல்வெட்டுகள் ______ நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.*
*அ) கி.மு. மூன்றாம் ஆ) கி.பி. மூன்றாம் இ) கி.மு. ஐந்தாம் ஈ) கி.மு. ஏழாம்*

*12. அம்புவிடும் கலை ____ எனப்படும்.*
*அ) ஏகலை ஆ) வரைகலை இ) ஆடல் கலை ஈ) பாடல் கலை*

*13. பல குறுநிலங்களை உள்ளடக்கிய பெரு நிலம் ______ எனப்படும்.*
*அ) மாநிலம் ஆ) மாவட்டம் இ) மாநகரம் ஈ) மாநாடு*

*14. பழங்காலத்தில் எய்ப்பன்றி என்று அழைக்கப்படும் விலங்கு _____.*
*அ) முள்ளம்பன்றி ஆ) பன்றி இ) எறும்புத்தின்னி ஈ) பெருச்சாளி*

15. எழுத்துகளின் பிறப்பை _____ வகையாகப் பிரிப்பர்.
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

16. பழைய தமிழெழுத்துகள், ______ ஆட்சிக் கால கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.
அ) முதலாம் இராசராச சோழன் ஆ) முதலாம் இராசேந்திர சோழன்
இ) இரண்டாம் இராசேந்திர சோழன் ஈ) கரிகால் சோழன்

17. மகர எழுத்தைக் குறிப்பிட ____ எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்.
அ) பகர ஆ) ககர இ) தகர ஈ) சகர

***II. சரியா? தவறா?***

1. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர் ஆவார்.
அ) சரி ஆ) தவறு

2. சிங்கத்தின் இளமைப் பெயர் கன்று ஆகும்.
அ) சரி ஆ) தவறு

***III. பொருத்துக.***

1. மயக்கம் - பாட்டு
2. செய்யுள் - வளமிக்க மொழி
3. திரிதல் - கலவை
4. வண்மொழி - தவறாமை
5. வழாஅமை - மாறுபடுதல்
6. மயக்கம் - கலவை
7. செய்யுள் - பாட்டு
8. திரிதல் - மாறுபடுதல்
9. வண்மொழி - வளமிக்க மொழி
10. வழாஅமை - தவறாமை